**OS.NO.173/2018** **Date: 15.10.2025**

ரமேஷ் **(PW1)**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு பி சொத்து எனக்கு சொந்தமானது என்பதற்கு என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றல் பட்டா, சிட்டா, EB Receipt, சொத்து வரி, என் தந்தையின் இறப்பு சான்றிதழ், எனது பாட்டியின் செட்டில்மென்ட் பத்திரம், எனது தந்தையின் செட்டில்மென்ட் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் எனது தந்தைக்கும் இடையே பி அட்டவனை சொத்து சம்மந்தமாக வாய்மொழி பாகப்பரிவினை எப்போது நடந்தது என்றால் 2008ல் நடந்தது, தேதி ஞாபகம் இல்லை. எனக்கும் எனது தந்தைக்கும் இடையே பி அட்டவனை சொத்து சம்மந்தமாக வாய்மொழி பாகப்பரிவினை நடந்ததற்கு சாட்சியாக யார் இருந்தார்கள் என்றால் சாட்சி இல்லை, நானும் எனது அப்பாவும் தனிப்பட்ட முறையில் தான் பிரித்துக்கொண்டோம். வழக்கு C, D, E சொத்துக்களை பாகப்பிரிவினை செய்ய இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதியிடம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டேன். எப்போது கேட்டேன் என்றால் 2009ல் கேட்டேன். இந்த விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்கு C, D, E சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு அவர்களுடைய தந்தையார் மூலமாக கொடுத்த பதவு செய்யப்பட்ட உயில் மூலமாக கிடைக்கப்பட்டதால் தான் மேற்படி சொத்துக்கள் குறித்து பிரதிவாதிகளிடம் நான் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பிறகு பிரதிவாதிகளின் சொத்தை நான் அடைய வேண்டும் என்பதற்காக

அவர்களுக்கு நான் தொடர்ந்து இடையூறு செய்ததால் என் மீது புகார் கொடுக்கப்பட்டு என் மீது விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.294/2018 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சொத்திற்காக வழக்கு பதிவு செய்யப்படவில்லை, எனது அக்கா மீது தேவையில்லாமல் Mis Behave செய்ததாக பொய் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். எனது அப்பா பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் செல்லாது என்று இந்த நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். மேற்படி உயில் செல்லாது என்று எந்த இடத்தில் கேட்டுள்ளேன் என்று சாட்சியிடம் பிராது கொடுத்து கேட்டதற்கு தனியாக பரிகாரம் கேட்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். பி அட்டவனை சொத்து குறித்து எனது தந்தை உயில் எழுத உரிமை இல்லை என்று என்னுடைய பிராதில் பக்கம் 4ல் பத்தி 10ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நானோ அல்லது எனது மனைவியோ பிதிவாதிகளின் மீது நீதிமன்றத்தில் வழக்கு ஏதாவது தொடரந்துள்ளேனா என்றால் நான் தொடரவில்லை. என்னை காவல் துறையினர் அழைத்து சென்றதால் வழக்கு ஏதாவது திசைத்திருப்ப வேண்டும் என்ற காரணத்தில் எனது மனைவியை பயமுறுத்தி நீ இங்கு வாடகை இருக்குமாறு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தினார்கள். என்னை காவல் துறையினர் அழைத்து சென்ற காரணத்திற்காக பயந்து எனது மனைவி வாடகை ஒப்பந்தத்தை ஏற்றார். மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரத்தில் அசல் வழக்கு எண்.98/2018 என்ற எனது மனைவி பிரதிவாதிகளின் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)